# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசார பீடம் /புவியியற்துறை

### நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

### 2011/2012 (2015)

**Geos 4102** பிரதேச திட்டமிடலும் அபிவிருத்தியும் (Regional **Development & Planning)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இவ்விரு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக.

---

#### பகுதி-1

01. 1. பிரதேச அபிவிருத்திக் கற்கையின் முக்கியத்துவம் யாது?

(05 புள்ளிகள்)

11. பிரதேச அபிவிருத்தி நிலையில் நாடுகளுக்கு நாடு வேறுபாடு காணப்படினும் எந்த ஒரு வளர்ச்சி பெற்ற நாடோ அல்லது வளர்முக நாடோ இப்பிரச்சினையிலிருந்து முற்றாக விடுபடவில்லை. உதாரணங்களுடன் ஆராய்க.

(20 புள்ளிகள்)

02. 1. இலங்கையில் 1970 களுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பிரதேச அபிவிருத்தித் திட்டங்களைக் குறிப்பிடுக

(05 புள்ளிகள்)

11. இத்திட்டங்கள் பிரதேச வேறுபாடுகளைக் குறைக்க எந்தளவுக்குப் பங்களிப்புச் செய்துள்ளன என்பதை யாதாவது ஒரு திட்டத்தை உதாரணங் காட்டி விளக்குக.

(20 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினுக்கு குறிப்புரை தருக.

1. கீழிருந்து மேல் நோக்கிய அபிவிருத்தி
11. பெண்கள் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்
111. துடிப்பான நகரங்களும் பிரதேச அபிவிருத்தியும்
1v. பிரதேச ரீதியான திட்டமிடலின் போது எதிர் கொள்ளும் சவால்கள்

(25 புள்ளிகள்)

## பகுதி 11

04. பிரதேச அபிவிருத்திப் பிரதேசங்களை இனங் காணப் பயன்படுத்தப்படும் சமூக பொருளாதாரச் சுட்டிகள், காட்டிகளை ஆராய்ந்து இவற்றின் பயனுறுதித் தன்மைகளை விளக்குக.

(25 புள்ளிகள்)

05 'பிரதேச திட்டமிடலின் வெற்றி பிரதேசங்களுக்கு வழங்கப் பட்டுள்ள அதிகாரங்களிலும் நிறுவனக் கட்டமைப்பிலும் மக்களின் பங்களிப்பிலும் தங்கியுள்ளது'. ஆராய்க

(25 புள்ளிகள்)

06. இந்தியாவின் பிரதேச அபிவிருத்தித் திட்டமிடலை முன்னெடுப்பதற்குப் பொறுப்பாயமைந்த காரணிகளைக் குறிப்பிட்டு பின்தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்குப் பின்பற்றப் பட்ட உபாயங்கள் பற்றியும் நுணுக்கமாகப் பரிசீலனை செய்க.

(25 புள்ளிகள்)